தமிழ்ச் செய்யுள் திரட்டு- கலை- I

முதற் பருவம் மற்றும் இரண்டாம் பருவம்

பட்ட வகுப்பு பாடத்திட்டத்திற்குரியது.

Under the National Educational Policy (NEP-2020)

TAMIL CHEIYUL THIRATTU- KALAI - I .

Tamil Poetry Selections.

I & II Semester.

B.A. / B.V.A / B.P.A. TAMIL LANGUAGE

BENGALURU CITY UNIVERSITY

தமிழ்ப் பாடநூல் குழு.

BENGALURU CITY UNIVERSITY.

Bengaluru-560001.

TAMIL CHEIYUL THIRATTU - KALAI - I.

A Prescribed Tamil Text book (Poetry Selections) for B.A/ B.V.A / B.P.A. Degree Courses (I & II Semester)

Chief Editor: Prof.U.Basavaraju.

Chairman, Board of Studies in Tamil & Malayalam, Bengaluru City University & Professor of Tamil, Maharani Cluster University Bengaluru-560001.

Edited by: Prof.I. Arockia Mary.

HoD of Tamil,
St.Joseph' s college (Autonomous) Lalbagh road,
Bengaluru-560027.

Published by:
Bengaluru City University, Bengaluru-560001.

© Bengaluru City University.

Pp.
First Print - 2022.

தலைமைப் பதிப்பாசிரியர்.

பேரா. உ. பசவராசு.

Price:

விலை ரூ:

வெளியீடு:

பெங்களூரு நகரப் பல்கலைக் கழகம்.

FOREWORD

I am happy to present the new edition of the Tamil text book **TAMIL CHEYUL THIRATTU – KALAI -I** For the **I**st and **II**nd semester BA/ BVA/ BPA degree courses of Bengaluru City University (BCU) published by Bengaluru City University. I hope this new textbook will be a rewarding experience for both Teachers and students. Board of studies – Tamil, BCU has taken this initiative of selecting, editing and designing this textbook. I thank the Chief Editor, Editor, members of the text book committee and the staff of Bengaluru City University for publishing this book.

Prof. Lingaraja Gandhi
Vice-Chancellor
Bengaluru City University

Preface

As per the request of the Board of Studies in Tamil, Bengaluru City University is bringing out the Tamil Text Book of Poetry "**Tamil Cheiyul Thirattu Kalai-I** for the **I**st and **II**nd semester BA/ BVA/ BPA degree courses of Bengaluru City University (BCU)

The Tamil Students of this University will be very much benefited by this Publication.

I thank our University Vice-Chancellor Prof. Lingaraja Gandhi and Registrar of Bengaluru City University for their Consistent support for this publication.

I thank the Members of Board of Studies for their efforts in the preparation of this textbook.

Prof. U. Basavaraju
Chairman,
Board of Studies in Tamil
& Malayalam,
Bengaluru City University.

Members of the Board of Studies in Tamil

1. **Prof. U. Basavaraju** Chief Editor
   Chairman, Board of Studies in
   Tamil and Malayalam,
   Bengaluru City University and
   HoD of Tamil,
   Maharani Cluster University,
   Bengaluru-560001.

2. **Prof. I. Arockia Mary** Editor
   HoD of Tamil,
   St. Joseph's College (Autonomous)
   Lalbagh Road, Bengaluru-560027

3. **Mrs. Amudha. S** Member
   Associate Professor of Tamil
   Goodwill Christian College for Women,
   Bengaluru-560005

4. **Dr. T. Saraswathi** Member
   Assistant Professor in Tamil
   Govt. Arts and Science College,
   Midugarapalli,
   Hosur (TN) Pin-635109.

முன்னுரை.

கர்நாடக மாநிலத் தலைநகராம் பெங்களூருவில் அமைந்து கலை ,அறிவியல் , வணிகம், நிர்வாகவியல் ,கணினி மற்றும் பல்வேறு துறைக் கல்வியை வழங்கி வரும் பெங்களூரு நகரப் பல்கலைக்கழகத்தின் செயல்திறன் பல்வேறு வகைகளில் வளர்ந்து வருகிறது.

மாணவர்களின் நலன் கருதி அவர்களின் வளர்ச்சியை உள்வாங்கிக் காலத்திற்குத் தகுந்தவாறு இப்பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அது **தமிழ்ச் செய்யுள் திரட்டு- கலை -I** ஆக வெளிவந்துள்ளதுஇது **B.A / B.V.A /B.P.A** பட்ட வகுப்பிற்குரிய முதல் பருவம் மற்றும் இரண்டாம் பருவ மாணாக்கர்களுக்கு உரியது.

கர்நாடகத்தில் தமிழ் பயிலும், பயில வரும் அண்டை மாநில மாணவர்கள் அனைவருக்கும் பெங்களூரு நகரப் பல்கலைக்கழக பாட நூல் குழுவினரால் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூல் உருவாகப் பல வகைகளிலும் உதவிய பாடநூல் குழுவினருக்கும், புலவர் கார்த்தியாயினி அம்மையார் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களும், ஆசிரியர்களும் இந்நூலைப் பயன்படுத்திப் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பேரா.பசவராசு .உ .
தலைவர்
பாடநூற்குழு
பெங்களூரு நகரப்
பல்கலைக்கழகம்.

தமிழ்ச் செய்யுள் திரட்டு - கலை-I

முதற் பருவம் மற்றும் இரண்டாம் பருவம்

பட்ட வகுப்பு பாடத்திட்டத்திற்குரியது.

Under the National Educational Policy (NEP-2020)

TAMIL CHEIYUL THIRATTU- KALAI - I.

Tamil Poetry Selections.

I & II Semester.

B.A. / B.V.A / B.P.A. TAMIL LANGUAGE

BENGALURU CITY UNIVERSITY

தமிழ்ப் பாடநூல் குழு.

ಬೆಂಗಳೂರು ನಗರ ವಿಶ್ವವಿದ್ಯಾಲಯ BENGALURU CITY UNIVERSITY

BE BOUNDLESS

BENGALURU CITY UNIVERSITY.

Bengaluru-560001.

பொருளடக்கம்.

முதற் பருவம்	இரண்டாம் பருவம்.
அலகு- I. **புறநானூறு.** 1.காவற்பெண்டு. 2.பிசிராந்தையார். 3.கணியன் பூங்குன்றனார். 4.கோப்பெருஞ்சோழன். 5.மாறோக்கத்து நப்பசலையார். **அலகு - II.** **முல்லைப் பாட்டு.** **அலகு- III.** **ஐந்திணை ஐம்பது** 1.வருவர் வயங்கிழாய் 2.மஞ்சிவர் சோலை. 3. கோலச் சிறுகுறுகின். 4. சுனைவாய்ச் சிறுநீரை. 5.கொடுந்தாள் அலவ! **அலகு-IV.** **இலக்கணம் - எழுத்து** 1. முதல் எழுத்து 2சார்பெழுத்து . 3.மொழி முதல் எழுத்துகள் 4.மொழி இறுதி எழுத்துகள் 5.போலி 6.சுட்டு 7.வினா எழுத்து	**அலகு - I.** **சிலப்பதிகாரம்.** புறஞ்சேரி இறுத்தக் காதை. **அலகு-II.** **பெரிய புராணம்-** **அப்பூதியடிகள் புராணம்.** **அலகு- III.** **திருவாசகம்.** 1.திருவம்பாவை 2.திருப்பொற்சுண்ணம் 3.திருக்கோத்தும்பி 4.திருச்சாழல் 5.திருப்பள்ளி எழுச்சி. **அலகு -IV.** **சொல் இலக்கணம்** 1.சொல் விளக்கம் 2.பகுபதம், பகாபதம் 3.பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல். 4.இயற்சொல் , திரிசொல், திசைச்சொல், வடசொல் 5.தொகைச் சொற்கள்

புறநானூறு

இந்நூல் புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டுள்ளது. எனவே புறனாநூறு என்ற பெயரைப் பெற்றது. மக்கள் எய்த வேண்டிய உறுதிப் பொருள்களைத் தமிழர் அகம், புறம் எனும் இர பிரிவுகளாக வகுத்துள்ளனர். அகத்தில் இன்பமும் புறத்தில் அறம், பொருள்,வீடு என்பனவும் அடங்கும்.

கடைச்சங்க காலத்தில் வழங்கி வந்த செய்யுட்களையும் அக்காலத்தில் புதியனவாக எழுந்த பாடல்களையும் தொகுத்த சான்றோர்கள் அவற்றைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என வகைப்படுத்தினர். புறனாநூறு என்பது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும்.

இந்நூல் அக்காலத்தில் நம் தமிழ் நாட்டில் சிறந்து விளங்கிய சேர, சோழ ,பாண்டியர்களாகிய முடியுடை மூவேந்தர்கள் , குறுநில மன்னர்கள், வள்ளல்கள், அமைச்சர்கள், தானைத்தலைவர்கள் வீரர்கள், புலவர்கள் முதலியோர்களின் வரலாறுகளைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. அக்கால மக்களின் வீரம்,கொடைப்பண்பு, பழக்க வழக்கங்கள், அரசியல்,போர்முறைகள் போன்றவையும் இந்நூலால் நன்கு புலப்படுகின்றன.

இந்நூலில் உள்ள பாடல்களைப் பாடிய புலவர்கள் அனைவரும் ஒரு காலத்தவரோ ஒரு இடத்தவரோ ஒரு குலத்தவரோ அல்லர். பாடியவர்களில் அரசர், அந்தணர், வணிகர், பெண்கள் எனப் பலரும் உள்ளனர்.

அகப் பாடல்கள் , காதல் வாழ்வையும் புறப்பாடல்கள் வெளியுலக வாழ்வான வீரம், போர், வெற்றி, ஈகை, கல்வி, புகழ் முதலியவற்றையும் உணர்த்துகின்றன. இந்நூலில் உள்ள ஐந்து பாடல்கள் இங்குப் பாடமாக அமைந்துள்ளன.

1.சிற்றில் நற்றூண் பற்றி, நின்மகன்
யாண்டுளனோ? என வினவுதி; என் மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன் ; ஓரும்
புலி சேர்ந்து போகிய கல்அளை போல,
ஈன்ற வயிரோ இதுவே;
தோன்றுவன் மாதோ, போர்க்களத் தானே!

பாடியவர்: காவற் பெண்டு

திணை: வாகை
துறை: ஏறாண் முல்லை

2.காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே,
மாநிறைவு இல்லதும் , பன்நாட்கு ஆகும்;
நூறு செறு ஆயினும் , தமித்துப்புக்கு உணினே,
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே,
கோடி யாத்து, நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்,
தானும் உண்ணான், உலகமும் கெடுமே.

பாடியவர்: பிசிராந்தையார்
பாடப்பட்டோன்: பாண்டியன் அறிவுடை நம்பி
தினண: பாடாண்
துறை: செவியறிவுறூஉ

3.யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன;
சாதலும் புதுவது அன்றே ; வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,
இன்னாது என்றலும் இலமே; மின்னொடு
வானம் தண்துளி தலைஇ, ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல , ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

பாடியவர்: கனியன் பூங்குன்றனார்
திணை: பொதுவியல்

துறை: பொருண்மொழிக் காஞ்சி

4.செய்குவம் கொல்லோ நல்வினை எனவே
ஐயம் அறாஅர் கசடுஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவுஇல் லோரே
யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால் உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசினோர்க்குச்
செய்வினை மருங்கின் எய்தல் உண்டெனின்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்
தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்லெனின்
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்
மாறிப் பிறவார் ஆயினும் இமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல் தவத் தலையே.

பாடியவர்: கோப்பெருஞ்சோழன்
திணை: பொதுவியல்
துறை: பொருண்மொழிக் காஞ்சி

5.செற்றன்று ஆயினும் செயிற்றன்று ஆயினும்
உற்றன்று ஆயினும் உய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழுது ஏத்தி
இரந்தன்று ஆகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர் கடக்கும் தானைத்
திண்தேர் வளவற் கொண்ட கூற்றே.

பாடியவர்: மாறோக்கத்து நப்பசலையார்
திணை : பொதுவியல்
துறை: கையறுநிலை

முல்லைப் பாட்டு

(காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது)

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று முல்லைப்பாட்டு. இது ஒரு அகப்பொருள் பற்றிய நூல். போருக்குச் சென்ற தலைவன் திரும்பும் வரை ஆற்றியிருந்த தலைவியின் செயலைக் கூறுவதால் இந்நூல் முல்லைப்பாட்டு என்ற பெயரைப் பெற்றது. இது 103 அடிகளால் ஆகி ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது.

தலைவன் போருக்குச் செல்லவிருக்கின்றான் என்பதை அறிந்த தலைவி வாட்டம் அடைகின்றாள். அவளது வாட்டத்தைப் போக்கிப் போருக்குச் சென்றான் தலைவன். ஆயினும் அவனது பிரிவை ஆற்ற இயலாது தலைவி வருந்துகின்றாள். அந்நேரத்தில் பெருமுதுபெண்டிர் தலைவியைத் தேற்றுகின்றனர். தான் மேற்கொண்ட போரை இனிது முடித்த தலைவன், தலைவியைத் காண விரைந்து வருகின்றான் போன்ற செய்திகளை மிகவும் அழகாக முல்லைப்பாட்டு கூறுகின்றது.

நல்லோர் விரிச்சி கேட்டல்

'நனந் தலை உலகம் வளைஇ, நேமியொடு
வலம்புரி பொறித்த மா தாங்கு தடக் கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடு இமிழ் பனிக் கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி

பெரும் பெயல் பொழிந்த சிறு புன் மாலை,
அருங் கடி மூதூர் மருங்கில் போகி,
யாழ் இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழி கொண்ட, நறு வீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது,
பெரு முது பெண்டிர், விரிச்சி நிற்ப

தலைவியைத் தேற்றுதல்

சிறு தாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறு துயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள்,"கைய

கொடுங் கோற் கோவலர் பின் நின்று உய்த்தர,
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நல் மொழி கேட்டனம்: அதனால்,
நல்ல, நல்லோர் வாய்ப்புள்; தெவ்வர்
முனை கவர்ந்து கொண்ட திறையர் வினை முடித்து
வருதல், தலைவர், வாய்வது; நீ நின்
பருவரல் எவ்வம் களை, மாயோய்!' என,
காட்டவும் காட்டவும் காணாள், கலுழ் சிறந்து,
பூப் போல் உண் கண் புலம்பு முத்து உறைப்ப

பாசறையின் இயல்பு

கான் யாறு தழீஇய அகல் நெடும் புறவில்,
சேண் நாறு பிடவமொடு பைம் புதல் எருக்கி,
வேட்டுப் புழை அருப்பம் மாட்டி, காட்ட
இடு முள் புரிசை ஏமுற வளைஇ,
படு நீர்ப் புணரியின் பரந்த பாடி

யானைப் பாகரது செயல்

உவலைக் கூரை ஒழுகிய தெருவில்,
கவலை முற்றம் காவல் நின்ற
தேம் படு கவுள சிறு கண் யானை
ஓங்கு நிலைக் கரும்பொடு, கதிர் மிடைந்து யாத்த,
வயல் விளை, இன் குளகு உண்ணாது, நுதல் துடைத்து,
அயில் நுனை மருப்பின் தம் கையிடைக் கொண்டென,
கவை முட் கருவியின், வடமொழி பயிற்றி,
கல்லா இளைஞர், கவளம் கைப்ப

வீரர்கள் தங்கும் படைவீடுகள்

கல் தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்
முக் கோல் அசைநிலை கடுப்ப, நல் போர்
ஓடா வல் வில் தூணி நாற்றி
கூடம் குத்திக் கயிறு வாங்கு இருக்கை
பூந் தலைக் குந்தம் குத்தி, கிடுகு நிரைத்து,
வாங்கு வில் அரணம் அரணம் ஆக,

பாசறை அமைப்பு
வேறு பல் பெரும் படை நாப்பண், வேறு ஓர்,
நெடுங் காழ்க் கண்டம் கோலி, அகம் நேர்பு,

மங்கையர் விளக்குகளை ஏந்துதல்
குறுந் தொடி முன்கை, கூந்தல் அம் சிறு புறத்து,
இரவு பகல் செய்யும் திண் பிடி ஒள் வாள்
விரவு வரிக் கச்சின் பூண்ட, மங்கையர்
நெய் உமிழ் சுரையர் நெடுந் திரிக் கொளீஇ,
கை அமை விளக்கம் நந்துதொறும் மாட்ட,

மெய்காப்பாளர் காவல்புரிதல்
நெடு நா ஒள் மணி நிழத்திய நடு நாள்,
அதிரல் பூத்த ஆடு கொடிப் படாஅர்
சிதர் வரல் அசைவளிக்கு அசைவந்தாங்கு,
துகில் முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்கு நடைப்
பெரு மூதாளர் ஏமம் சூழ

நாழிகைக் கணக்கர் பொழுது அறிவித்தல்
பொழுது அளந்து அறியும், பொய்யா மாக்கள்,
தொழுது காண் கையர், தோன்ற வாழ்த்தி,
'எறி நீர் வையகம் வெலீஇய செல்வோய்! நின்
குறு நீர்க் கன்னல் இனைத்து' என்று இசைப்ப

தலைவன் படுக்கையில் கண்பொருந்தாது சிந்தனையில் ஆழ்தல்
மத்திகை வளைஇய, மறிந்து வீங்கு செறிவு உடை,
மெய்ப்பை புக்க வெரு வரும் தோற்றத்து,
வலி புணர் யாக்கை, வன்கண் யவனர்
புலித் தொடர் விட்ட புனை மாண் நல் இல்,
திரு மணி விளக்கம் காட்டி, திண் ஞாண்
எழினி வாங்கிய ஈர் அறைப் பள்ளியுள்
உடம்பின் உரைக்கும், உரையா நாவின்,
படம் புகு மிலேச்சர் உழையர் ஆக,
மண்டு அமர் நசையொடு கண்படை பெறாஅது

தலைவனது சிந்தனை

எடுத்து எறி எஃகம் பாய்தலின், புண் கூர்ந்து,
பிடிக் கணம் மறந்த வேழம் வேழத்துப்
பாம்பு பதைப்பன்ன பரூஉக் கை துமிய,
தேம் பாய் கண்ணி நல் வலம் திருத்தி,
சோறு வாய்த்து ஒழிந்தோர் உள்ளியும்; தோல் துமிபு
வைந் நுனைப் பகழி மூழ்கலின், செவி சாய்த்து,
உண்ணாது உயங்கும் மா சிந்தித்தும்;
ஒரு கை பள்ளி ஒற்றி, ஒரு கை
முடியொடு கடகம் சேர்த்தி, நெடிது நினைந்து

பாசறையில் வெற்றி முழக்கம்

பகைவர்ச் சுட்டிய படை கொள் நோன் விரல்,
நகை தாழ் கண்ணி நல் வலம் திருத்தி,
அரசு இருந்து பனிக்கும் முரசு முழங்கு பாசறை

தலைவனது பிரிவினால் தலைவி பெற்ற துயரம்

இன் துயில் வதியுநன் காணாள், துயர் உழந்து,
நெஞ்சு ஆற்றுப்படுத்த நிறை தபு புலம்பொடு,
நீடு நினைந்து, தேற்றியும், ஓடு வளை திருத்தியும்,
மையல் கொண்டும், ஒய்யென உயிர்த்தும்,
பாவை விளக்கில் பரூஉச் சுடர் அழல,
இடம் சிறந்து உயரிய எழு நிலை மாடத்து,
முடங்கு இறைச் சொரிதரும் மாத் திரள் அருவி
இன் பல் இமிழ் இசை ஓர்ப்பனள் கிடந்தோள்
அஞ்செவி நிறைய ஆலின

தலைவன் வெற்றியுடன் மீண்டு வருதல்

வென்று, பிறர் வேண்டு புலம் கவர்ந்த,
ஈண்டு பெருந் தானையொடு,
விசயம், வெல் கொடி உயரி, வலன் ஏர்பு,
வயிரும் வளையும் ஆர்ப்ப,

மழையினால் செழித்த முல்லை நிலம் காணுதல்

அயிர செறி இலைக் காயா அஞ்சனம் மலர,

முறி இணர்க் கொன்றை நன் பொன் கால,
கோடல் குவி முகை அங்கை அவிழ,
தோடு ஆர் தோன்றி குருதி பூப்ப,
கானம் நந்திய செந் நிலப் பெரு வழி,
வானம் வாய்த்த வாங்கு கதிர் வரகின்,
திரி மருப்பு இரலையொடு மட மான் உகள,
எதிர் செல் வெண் மழை பொழியும் திங்களில்,

தலைவனது தேரின் வருகை

முதிர் காய் வள்ளிஅம் காடு பிறக்கு ஒழிய,
துனை பரி துரக்கும் செலவினர்
வினை விளங்கு நெடுந் தேர் பூண்ட மாவே.

ஐந்திணை ஐம்பது

இதன் ஆசிரியர், மாறன் பொறையனார். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருள்களில் ஏதேனும் ஒன்றினை எடுத்துக் கூறும் நூல்களாகும்.

ஐந்திணை ஐம்பது என்னும் இந்நூல் அம்முப்பொருள்களில் ஒன்றாகிய இன்பத்தினை எடுத்து விளக்கிச் சொல்வதாகும்.ஐந்திணைகளின் ஐந்தொழுக்கங்களும் இந்நூலில் பப்பத்து வெண்பாக்களாக ஐம்பது வெண்பாக்களால் அமைந்துள்ளது.

அவற்றுள் திணைக்கு ஒரு பாடலாக ஐந்து பாடல்கள் நம் பாடப் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

1. வருவர் வயங்கிழாய் வாள்ஒண்கண் நீர்கொண்டு
உருகி உடன்றுஅழிய வேண்டா – தெரிதியேல்
பைங்கொடி முல்லை. அவிழ்அரும்பு ஈன்றன
வம்ப மழையுறக் கேட்டு.

திணை: முல்லை
துறை: பருவம் வந்தது என்று வருந்திய தலைவியைத் தோழி பருவம் அன்று என்று வற்புறுத்தியது.
கூற்று: தோழிக் கூற்று

2. மஞ்சிவர் சோலை வளமலை நன்னாட!
எஞ்சாது நீவருதி என்றுஎண்ணி – அஞ்சித்
திருவொடுங்கும் மென்சாயல் தேம்கோதை மாதர்
உருவொடுங்கும் உள்ளுருகி நின்று.

திணை: குறிஞ்சி
துறை: இரவுக்குறி வந்து பெயரும் தலைவனைத் தோழி வரைவு கடாயது.
கூற்று: தோழி

3. கோலச் சிறுகுருகின் குத்துஅஞ்சி ஈர்வாளை
நீலத்துப் புக்குஒளிக்கும் ஊரற்கு – மேலெல்லாம்
சார்தற்குச் சந்தனச்சாந்து ஆயினேம் இப்பருவம்
காரத்தின் வெய்ய என்தோள்

திணை: மருதம்
துறை: பாணற்குத் தலைவி வாயில் மறுத்தது
கூற்று: தலைவி

4. சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதுஎன்று எண்ணிப்
பிணைமான் இனிதுஉண்ண வேண்டிக் –
                                        கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரம்என்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி.

திணை: பாலை
துறை: பிரிவின்கண் ஆற்றாத தலைவியைத் தோழி ஆற்றுவித்தது.
கூற்று: தோழி

5. கொடுந்தாள் அலவ! குறையாம் இரப்பேம்
ஒடுங்கா ஒலிகடல் சேர்ப்பன் – நெடுந்தேர்
கடந்த வழியைஎம் கண்ஆரக் காண
நடந்து சிதையாதி நீ.

திணை: நெய்தல்
துறை: காமமிக்க கழிபடர் கிளவி
கூற்று: தலைவி

இலக்கணம் – எழுத்து

எழுத்து:

நாம் பேசுவதை வரி வடிவில் எழுதுவது எழுத்து எனப்படும். அது முதல் எழுத்து, சார்பெழுத்து என இருவகைப்படும்.

முதல் எழுத்துகள்:

பிற எழுத்துகள் தோன்ற அடிப்படையாக உள்ள எழுத்துகள் முதல் எழுத்துகள் எனப்படும். அவ்வகையில் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் மெய்யெழுத்துகள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் எனப்படும்.

உயிர் எழுத்துகள்:

வேற்று ஒலிகளின் துணையின்றித் தானே இயங்கும் எழுத்துகள் உயிர்எழுத்துகள்ஆகும்.நமதுஉடலில்உள்ள உயிர் தானே இயங்கி உடலையும் இயக்குவது போல் உயிர் எழுத்துகள் மெய்யெழுத்துகளோடு சேர்ந்து அவற்றையும் இயக்குவதால் உயிர் எழுத்துகள் எனப்படுகிறது.

அவையாவன:

அ,ஆ,இ,ஈ,உ,ஊ,எ,ஏ,ஐ,ஒ,ஓ,ஔ - இப்பன்னிரண்டு எழுத்துகளும் உயிர் எழுத்துகள் ஆகும். இவ்வுயிர் எழுத்துகள் குறில், நெடில் என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

குறில்:

அ,இ,உ,எ,ஒ – இவை ஐந்தும் குறுகிய அளவில் ஒரு மாத்திரை அளவு உச்சரிக்கப்படுவதால் குற்றெழுத்துகள் எனப்படுகிறது.

நெடில்:

ஆ,ஈ,ஊ,ஏ,ஓ,ஐ,ஔ - இவை ஏழும் இரண்டு மாத்திரை அளவு நீண்டு ஒலிப்பதால் நெட்டெழுத்துகள் எனப்படுகிறது.

மெய்யெழுத்துகள்:

தானே தனித்து இயங்காது உயிர் எழுத்துகளின் துணையோடு இயங்கும் எழுத்துகள் மெய்யெழுத்துகள் எனப்படும்.

அவையாவன:

க்,ங்,ச்,ஞ்,ட்,ண்,த்,ந்,ப்,ம்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள்,ற்,ன் – இவை பதினெட்டும் மெய் எழுத்துகள் ஆகும்.

மெய் எழுத்துகளின் வகைகள்:

ஒலிக்கும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு மெய் எழுத்துகள் மூன்று வகைப்படும்.

அவையாவன:

வல்லினம், மெல்லினம், இடையினம் – என மெய்யெழுத்துகள் மூன்று வகைப்படும். மெய் எழுத்துகள் பதினெட்டும் அரை மாத்திரை அளவு ஒலிக்கும்.

வல்லினம்:

க்,ச்,ட்,த்,ப்,ற் -ஆகிய ஆறு எழுத்துகளும் வலிமையான ஓசையுடன் ஒலிக்கப்படுகின்றன..எனவே இவ்வெழுத்துகளை வல்லினம் என்பர்.

மெல்லினம்:

ங்,ஞ்,ண்,ந்,ம்,ன் – ஆகிய ஆறு எழுத்துகளும் மென்மையான ஓசையுடன் ஒலிக்கப்படுகின்றன. எனவே இவ்வெழுத்துகளை மெல்லினம் என்பர். இவற்றை உச்சரிக்கும் போது மூக்கின் வழியாகக் காற்று வெளிப்படுவதால் மூக்கொலிகள் என்றும் கூறுவர்.

இடையினம்:

ய் ,ர்,ல்,வ்,ழ்,ள் – ஆகிய ஆறு எழுத்துகளும் வன்மையாகவும் அல்லாமல் மென்மையாகவும் அல்லாமல் இடைப்பட்ட ஓசையுடன் ஒலிக்கப்படுகின்றன. எனவே இவ்வெழுத்துகளை இடையினம் என்பர்.

சார்பெழுத்துகள்:

முதல் எழுத்துகளான உயிர் எழுத்துகளையும் மெய் எழுத்துகளையும் சார்ந்து பிறக்கும் எழுத்துகள் சார்பெழுத்துகள் எனப்படும்.

வகைகள்:

சார்பெழுத்துகள் பத்து வகைப்படும்.

அவையாவன:

1.உயிர்மெய் எழுத்து

2.ஆய்த எழுத்து
3.உயிரளபெடை
4.ஒற்றளபெடை
5.குற்றியலுகரம்
6.குற்றியலிகரம்
7.ஐகாரக் குறுக்கம்
8.ஔகாரக் குறுக்கம்
9.மகரக் குறுக்கம்
10.ஆய்தக் குறுக்கம்

உயிர்மெய் எழுத்து:

உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் மெய் எழுத்துகள் பதினெட்டுடனும் சேர்ந்து பிறக்கும் 216 எழுத்துகளும் உயிர்மெய் எழுத்துகள் ஆகும். அவ்வாறு சேர்ந்து உருவான உயிர்மெய் எழுத்துகள் உயிர் எழுத்துகளின் ஒலி (மாத்திரை) அளவையே பெறும்.

(எ-டு) க்+அ=க (ஒரு மாத்திரை)
க்+ஆ=கா (இரண்டு மாத்திரை)

ஆய்தம்:

மூன்று புள்ளிகளைக் கொண்ட ஒரு வரி வடிவம் ஆய்த எழுத்தாகும்.இதற்குத் தனிநிலை, புள்ளி எழுத்து, அடுப்பெழுத்து என்ற பெயர்களும் உண்டு. இவ்வெழுத்து எப்பொழுதும் சொல்லின் இடையிலேயே வரும்.

(எ-டு) அஃது, எஃகு.

அளபெடை:

சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும் எழுத்துகள் சில நேரங்களில் தமக்குரிய மாத்திரை அளவில் இருந்து நீண்டு ஒலிக்கும்.அவ்வாறு ஒலிப்பதற்கு அளபெடை என்று பெயர்.

வகைகள்:

உயிரளபெடை,ஒற்றளபெடை என அளபெடை இருவகைப்படும்.

உயிரளபெடை:

1.செய்யுளிசை அளபெடை
2.இன்னிசை அளபெடை

3.சொல்லிசை அளபெடை

என உயிரளபெடை மூவகைப்படும்.

செய்யுளிசை அளபெடை:

செய்யுளில் ஓசை குறையும் போது அவ்வோசையை நிறைவு செய்ய சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும் நெட்டெழுத்துகள், தமக்குரிய இரண்டு மாத்திரை அளவில் இருந்து நீண்டு ஒலிக்கும். நெட்டெழுத்துகள் அளபெடுத்து வருவதைக் குறிக்க அதன் குறில் நெட்டெழுத்தை அடுத்து எழுதப்படும். இதனை இசைநிறை அளபெடை என்றும் கூறுவர்.

(எ-டு) ஆஅதும் என்னுமவர்

தெய்வம் தொழாஅள்

நல்ல படாஅ

இன்னிசை அளபெடை:

செய்யுளில் ஓசை குறையாத போதும்,இனிய ஓசையைத் தரும் பொருட்டு ஒரு குறில் நெடிலாக அளபெடுத்து வருவது இன்னிசை அளபெடை எனப்படும்.

(எ-டு) கெடுப்பதூஉம்

துன்புறூஉம்

சொல்லிசை அளபெடை:

செய்யுளில் வரும் ஒரு சொல்லின் பொருளை மாற்ற நெட்டெழுத்து அளபெடுத்து வருவது சொல்லிசை அளபெடை எனப்படும்.

(எ-டு)உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்.

இக் குறளில் வரும் **நசை** என்ற சொல் விருப்பம் என்ற பெயர்ச் சொல்லைக் குறிக்கிறது. ஆனால் **நசைஇ** என்று அளபெடுத்து வரும் போது விரும்பி என்று வினைச்சொல்லாக மாறுகிறது. இவ்வாறு ஒரு சொல்லின் பொருளை மாற்ற அளபெடுத்து வருவது சொல்லிசை அளபெடை எனப்படும்.

ஒற்றளபெடை:

செய்யுளில் ஓசை குறையும் போது சொல்லின் இடையிலும இறுதியிலும் வரும் ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்,வ்,ய்,ல்,ள் பத்து ஒற்றெழுத்துகளும் ஆய்த எழுத்தும் அவ்வோசையை நிறைக்க அளபெடுத்து வரும். அவை அளபெடுத்து வருவதைக் குறிக்க அவ்வொற்றெழுத்துகளே மீண்டும்

எழுதப்படும்.இவ்வாறு ஒற்றெழுத்துகள் அளபெடுத்து வருவது ஒற்றளபெடை எனப்படும்.

எ-டு: இலங்ங்கு வெண்பிறை – இடையில்
மடங்ங் கலந்த - இறுதியில்
எஃஃகிலங்கிய - இடையில்

குற்றியலுகரம்:

க்,ச்,ட்,த்,ப்,ற் – எனும் ஆறு வல்லின மெய்களுடனும் சேர்ந்து வரும் ' உ' கரம் அதாவது **கு,சு,டு,து,பு,று** – சொல்லின் இறுதியில் வரும் போது தனக்குரிய ஒரு மாத்திரை அளவில் இருந்து குறைந்து அரை மாத்திரை அளவில் ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ' உ'கரம் குற்றியலுகரம் எனப்படுகிறது.

குற்றியலுகரச் சொல்லின் இறுதி எழுத்தின் அடுத்த எழுத்தை நோக்க இக்குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

அவையாவன:

1.வன்தொடர்க் குற்றியலுகரம் – பாக்கு, பட்டு
2.மென்தொடர்க் குற்றியலுகரம் – சங்கு , ஆண்டு
3. இடைத்தொடர்க் குற்றியலுகரம் – மார்பு , சால்பு
4.உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் – வரகு, படகு
5.நெடில்தொடர்க் குற்றியலுகரம் – நாடு, காசு
6.ஆய்தத்தொடர் குற்றியலுகரம் – அஃது, எஃகு

குற்றியலிகரம்:

நிலைமொழியின் இறுதியில் குற்றியலுகரம் அதாவது கு,சு,டு,து,பு,று - வந்து வருமொழியின் முதலில் ' ய' வந்தால், நிலைமொழியும் வருமொழியும் இணையும் போது 'உ' என்ற எழுத்து 'இ' என்ற எழுத்தாக மாறும். இவ்வாறு திரிந்த 'இ' தனக்குரிய மாத்திரை அளவில் இருந்து குறைந்து ஒலிப்பதே குற்றியலிகரம் எனப்படுகிறது.

(எ-டு) நாடு+யாது = நாடியாது
சால்பு+ யாது=சால்பியாது

ஐகாரக் குறுக்கம்:

சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் அமைந்த 'ஐ' என்ற எழுத்து தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் இருந்து

குறைந்து ஒரு மாத்திரையாக உச்சரிக்கப்படும்.இவ்வாறு ‘ஐ' குறைந்து ஒலிப்பது ஐகாரக்குறுக்கம் எனப்படும்.

(எ-டு) ஐவர் ,கலைஞர் , குவளை

ஔகாரக் குறுக்கம்:

சொல்லின் முதலில் வரும் ' ஔ' என்ற எழுத்து தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் இருந்து குறைந்து ஒரு மாத்திரையாக ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் 'ஔ' , ஔகாரக் குறுக்கம் எனப்படுகின்றது.

(எ-டு) ஔவை, கௌதாரி

மகரக் குறுக்கம்:

ஒரு சொல்லில் ‘ண்’, அல்லது‘ன்'- என்ற மெய் எழுத்து வந்து அதனை அடுத்து ' ம்’ வந்தால் அது தனக்குரிய அரை மாத்திரையில் இருந்து குறைந்து ஒலிக்கும்.

(எ-டு) மருண்ம் (மருளும்)

போன்ம் (போலும்)

மேலும் நிலைமொழியின் இறுதியில் ‘ம்' அமைந்து வருமொழியின் முதலில் ' வ ' இருந்தாலும் ' ம்' தனக்குரிய அரை மாத்திரையில் இருந்து குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ‘ம்' மகரக் குறுக்கம் எனப்படுகிறது.

(எ-டு) வரும் வளவன்

தரும் வடிவேல்

ஆய்தக் குறுக்கம்:

தனிக்குறிலை அடுத்து ல்,ள் ஆகிய மெய்யெழுத்துகள் அமைந்து வருமொழியின் முதலில்‘த' வந்தால் அச் சொற்கள் இணையும் போது ஆய்தம் பிறக்கும்.இவ்வாய்தம் தனக்குரிய அரை மாத்திரையில் இருந்து குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஆய்தம் ஆய்தக் குறுக்கம் எனப்படுகிறது.

(எ-டு) கல் + தீது = கஃறீது

பல் + துளி = பஃறுளி

முள் + தீது = முஃடீது

மொழி முதல் எழுத்துகள்:

சொற்களின் முதலில் வரும் எழுத்துகள் மொழி முதல் எழுத்துகள் எனப்படும். அவை பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் க,ச,த,ந,ப,ம,வ,ய,ஞ,ங என்னும் பத்து உயிர்மெய் எழுத்துகளும் ஆகும்.

(எ-டு) அடை, ஆடை, இடை, ஈட்டி, உடை, ஊடகம்,
எடை,ஏடு, ஐயம்,ஒற்றுமை, ஓடம்,ஔவை.
கனி, சக்தி, தண்ணீர், நட்பு, படை, மக்கள்,
வளம், யவனர், ஞாலம், (அங்)ஙனம்.

மொழி இறுதி எழுத்துகள்:

சொற்களின் இறுதியில் வரும் எழுத்துகள் மொழி இறுதி எழுத்துகள் எனப்படும்.அவை தனித்தும் மெய்யுடன் கூடியும் வரும் பன்னிரண்டு உயிர் எழுத்துகளும், ஞ்,ண்,ந்,ம்,ன்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள் - என்னும் பதினொரு மெய் எழுத்துகளும், குற்றியலுகரமும் ஆகும்.

(எ-டு)
பல – அ
நிலா – ஆ
நன்றி - இ
தீ - ஈ
மருந்து - உ
பூ -ஊ
சேஎ (உயர்வு) - எ
எங்கே - ஏ
வெறுங்கை – ஐ
நொ (நோய்) – ஒ
கோ - ஓ
கௌ (பற்றுதல்) – ஔ
உரிஞ் (உரிஞ்சு) - ஞ்
மண் - ண்
வெரிந்(முதுகு) - ந்
மரம் - ம்
பொன் - ன்
பாய் - ய்
வேர் - ர்
வேல் - ல்
தெவ் (பகை) - வ்
யாழ் - ழ்
தேள் - ள்
அஃது - து (உ)

போலி:

ஒரு சொல்லின் முதலிலும் இடையிலும் கடையிலும் அமைந்த ஒரு எழுத்திற்குப் பதிலாக வேறொரு எழுத்து வந்து பொருள் மாறாமல் இருந்தால் அதைப் போலி என்பர். அது முதற்போலி,இடைப்போலி, கடைப் போலி என மூவகைப்படும்.

(எ-டு) **முதற் போலி:**

மஞ்சு – மைஞ்சு

மயன் – மையன்

இடைப் போலி:

அமச்சு – அமைச்சு

அரசு - அரைசு

கடைப் போலி:

பந்தல் – பந்தர்

அறம் – அறன்

சுட்டெழுத்துகள்:

ஒன்றைச் சுட்டிக் காட்ட வரும் எழுத்திற்குச் சுட்டெழுத்து என்று பெயர். அ,இ,உ – என்ற எழுத்துகள் சொல்லின் முதலில் நின்று ஒரு பொருளைச் சுட்டிக் காட்டும்.

இது அகச்சுட்டு, புறச் சுட்டு என இருவகைப்படும்.

(எ-டு) **அகச்சுட்டு:**

அது , இது , உது

அவன், இவன், உவன்

புறச் சுட்டு:

அப்பக்கம்

இப்பக்கம்

உப்பக்கம்

வினா எழுத்துகள்:

வினாப் பொருளைச் சுட்ட வரும் எழுத்துகள் வினா எழுத்துகள் எனப்படும். இவை சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும்.

சொல்லின் முதலில் வருவன:

எ,யா – எது?, யார்?

சொல்லின் இறுதியில் வருவன:

ஆ, ஓ – வந்தானா? , வந்தானோ?

சொல்லின் முதலிலும் இறுதியிலும் வருவன:

ஏ – ஏன்? , எங்கே?

வினா எழுத்துகளின் வகைகள்:

அகவினா ,புறவினா என இருவகைப்படும்.

அகவினா:

ஏன் , எங்கு , எப்படி

புறவினா:

எப்போது? ,வந்தானா? , அவனா? , எவ்வூர்?.

மாணவர்களின் கவனத்திற்கு

பாடத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அலகு ஐந்து பகுதியில் இருந்தும் வினாக்கள் கேட்கப்படும்-எனவே அலகு . 5க்கு உரிய சிறுகதை புத்தகமான **சிறுகதைகள் பத்து** என்னும் நூலையும் நல்ல முறையில் படித்து தேர்வு எழுத வேண்டும்.

இரண்டாம் பருவம்

சிலப்பதிகாரம் – மதுரைக் காண்டம்

ஐம்பெருங்காப்பியங்களாகிய சிலப்பதிகாரம் , மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவக சிந்தாமணி ஆகியவற்றுள் முதன்மைக் காப்பியமாகவும் முதல்காப்பியமாகவும் விளங்குவது சிலப்பதிகாரமே ஆகும். இதன் ஆசிரியர் இளங்கோவடிகள். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழால் ஆகியுள்ளது இக்காப்பியம் . இந்நூலில் மூன்று காண்டங்கள் உள்ளன. அவை தமிழகத்தை ஆண்ட முப்பெரு வேந்தர்களின் தலைநகரங்களாகிய புகார், மதுரை, வஞ்சி ஆகியவற்றின் பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளமை மிகவும் சிறப்புக்குரியதாகும்.

‘ அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' , ‘ உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் ' , ' ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்' , என்ற முப்பெரும் உண்மைகளை உணர்த்தி மிகச் சிறப்புடன் சிலப்பதிகாரம் விளங்குகிறது.இந்நூல் எழுந்த காலம் கி.பி.2-ஆம் நூற்றாண்டு ஆகும்.

புறஞ்சேரி இறுத்த காதை

"கதிரவனது சொல்லைக் கேட்ட கண்ணகி, எஞ்சிய ஒற்றைச் சிலம்பை ஏந்தி நகரினுள் புக்கு, நகர மாந்தரை நோக்கி முறையிட்டு அழுதல"

பெண் அணி கோலம் பெயர்ந்த பிற்பாடு,
புண்ணிய முதல்வி திருந்து அடி பொருந்தி,
‘கடுங் கதிர் வேனில் இக் காரிகை பொறாஅள்;
படிந்தில சீறடி பரல் வெங் கானத்து;
“கோள் வல் உளியமும் கொடும் புற்று அகழா;
வாள் வரி வேங்கையும் மான் கணம் மறலா;
அரவும், சூரும், இரை தேர் முதலையும்,
உருமும், சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா-
செங்கோல் தென்னவர் காக்கும் நாடு” என,
எங்கணும் போகிய இசையோ பெரிதே;
பகல் ஒளி-தன்னினும், பல் உயிர் ஓம்பும்
*நிலவு ஒளி விளக்கின், நீள் இடை மருங்கின்,
இரவிடைக் கழிதற்கு ஏதம் இல்’ என-

"அடிகள் ஒருப்படுதல் "

குரவரும் நேர்ந்த கொள்கையின் அமர்ந்து
,கொடுங்கோல் வேந்தன் குடிகள் போல,
படும் கதிர் அமையம் பார்த்திருந்தோர்க்கு-
'பல் மீன் தானையொடு பால் கதிர் பரப்பி,
தென்னவன் குலமுதல் செல்வன் தோன்றி,
தாரகைக் கோவையும் சந்தின் குழம்பும
சீர் இள வன முலை சேராது ஒழியவும்,
தாது சேர் கழுநீர்த் தண் பூம் பிணையல்
போது சேர் பூங் குழல் பொருந்தாது ஒழியவும்,
பைந் தளிர் ஆரமொடு பல் பூங் குறு முறி
செந்தளிர் மேனி சேராது ஒழியவும்
மலயத்து ஓங்கி மதுரையின் வளர்ந்து
புலவர் நாவில் பொருந்திய தென்றலொடு
பால் நிலா வெண் கதிர் பாவைமேல் சொரிய,
வேனில் திங்களும் வேண்டுதி' என்றெ
பார்மகள் அயா உயிர்த்து, அடங்கிய பின்னர்-

"அடிகளின் அறவுரையைக் கேட்டுக் கோவலன் வழிநடத்தல்"

ஆர் இடை உழந்த மாதரை நோக்கி
'கொடுவரி மறுகும்; குடிஞை கூப்பிடும்;
இடிதரும் உளியமும்; இனையாது ஏகு' என,
தொடி வளைச் செங் கை தோளில் காட்டி,
மறவுரை நீத்த மாசு அறு கேள்வி
அறவுரை கேட்டு, ஆங்கு, ஆர் இடை கழிந்து-
வேனல் வீற்றிருந்த வேய் கரி கானத்து,
கான வாரணம் கதிர் வரவு இயம்ப,
வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப்
புரிநூல் மார்பர் உறை பதிச் சேர்ந்து-

"கோவலன் நீர் நிலை நோக்கிச் செல்லுதல்"

மாதவத்து ஆட்டியொடு காதலி-தன்னை ஓர்

தீது தீர் சிறப்பின் சிறைஅகத்து இருத்தி,
இடு முள் வேலி நீங்கி, ஆங்கு, ஓர்
நெடு நெறி மருங்கின் நீர் தலைப்படுவோன்,

"கோவலனது உருவ மாறுபட்டால் ஐயுற்ற கௌசிகன், உண்மை தெளிய,மாதவிப்பந்தரை நோக்கிக் கூறுதல"

காதலி-தன்னொடு கானகம் போந்ததற்கு
ஊது உலைக் குருகின் உயிர்த்தனன் கலங்கி,
உள் புலம்புறுதலின், உருவம் திரிய;
கண்-புல மயக்கத்துக் கௌசிகன் தெரியான்,
'கோவலன் பிரியக் கொடுந் துயர் எய்திய,
மா மலர் நெடுங் கண் மாதவி போன்று, இவ்
அரும் திறல் வேனிற்கு அலர் களைந்து, உடனே,
வருந்தினை போலும் நீ, மாதவி!' என்று, ஓர்
பாசிலைக் குருகின் பந்தரில் பொருந்தி,
கோசிக மாணி கூறக் கேட்டே-

"அதைக் கேட்டகோவலன் கௌசிகனை அடுத்துக் கூறுதல்"

'யாது நீ கூறிய உரை ஈது, இங்கு?' என-
'தீது இலன், கண்டேன்' எனச் சென்று எய்திய-

"புகாரில் நிகழ்ந்தவற்றைக் கௌசிகன் அறிவித்தல்"

கோசிக மாணி கொள்கையின் உரைப்போன்:
இரு நிதிக் கிழவனும் பெரு மனைக் கிழத்தியும்
அரு மணி இழந்த நாகம் போன்றதும்;
இன் உயிர் இழந்த யாக்கை என்ன,
துன்னிய சுற்றம் துயர்க் கடல் வீழ்ந்ததும்;
'ஏவலாளர்! யாங்கணும் சென்று,
கோவலன் தேடிக் கொணர்க' எனப் பெயர்ந்ததும்;
'பெருமகன் ஏவல் அல்லது, யாங்கணும்,
அரசே தஞ்சம்' என்று. அரும் கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போல,
பெரும் பெயர் மூதூர் பெரும் பேது உற்றதும்;

வசந்தமாலைவாய் மாதவி கேட்டு,
பசந்த மேனியள், படர் நோய் உற்று,
நெடு நிலை மாடத்து இடை நிலத்து-ஆங்கு, ஓர்
படை அமை சேக்கைப் பள்ளியுள் வீழ்ந்ததும்;
வீழ் துயர் உற்றோள் விழுமம் கேட்டு,
தாழ் துயர் எய்தி, தான் சென்று இருந்ததும்;
இருந் துயர் உற்றோள், 'இணை அடி தொழுதேன்;
வரும் துயர் நீக்கு' என, மலர்க் கையின் எழுதி.
'கண் மணி அனையாற்குக் காட்டுக' என்றே,
மண் உடை முடங்கல் மாதவி ஈத்ததும்;
ஈத்த ஓலை கொண்டு, இடைநெறித் திரிந்து;
தீத்திறம் புரிந்தோன் சென்ற தேயமும்;
வழி மருங்கு இருந்து மாசு அற உரைத்து-

"மாதவியின் முடங்கலைப் பார்த்துக் கோவலன் உண்மை உணர்தல் ஆங்கு"

"அழிவு உடை உள்ளத்து ஆர் அஞர் ஆட்டி,
போது அவிழ் புரி குழல் பூங் கொடி நங்கை,
மாதவி ஓலை மலர்க் கையின் நீட்ட,
உடன் உறை காலத்து உரைத்த நெய் வாசம்
குறு நெறிக் கூந்தல் மண் பொறி உணர்த்திக்
காட்டியது; ஆதலின் கை விடலீயான்,
ஏட்டுஅகம் விரித்து, ஆங்கு எய்தியது உணர்வோன்,
'அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்;
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்;
குரவர் பணி அன்றியும், குலப்பிறப்புஆட்டியோடு
இரவிடைக் கழிதற்கு, என் பிழைப்பு அறியாது,
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்;
பொய் தீர் காட்சிப் புரையோய், போற்றி!'
என்று அவள் எழுதிய இசைமொழி உணர்ந்து,
'தன் தீது இலள்' என, தளர்ச்சி நீங்கி,
'என் தீது' என்றே எய்தியது உணர்ந்து-ஆங்கு

"மாதவியின் திருமுகத்தைத் தன் தந்தைக்குக் கோவலன் அனுப்புதல"

‘என் பயந்தோற்கு இம் மண் உடை முடங்கல்,
பொற்பு உடைத்தாக, பொருள் உரை பொருந்தியது;
மாசு இல் குரவர் மலர் அடி தொழுதேன்;
கோசிக மாணி! காட்டு’ எனக் கொடுத்து,
‘நடுக்கம் களைந்து, அவர் நல் அகம் பொருந்திய
இடுக்கண் களைதற்கு ஈண்டு’ எனப் போக்கி-

"கோவலன் மீண்டு வந்து, பாணர்களுடன் இசை பாடிப் பொழுது போக்குதல்"

மாசு இல் கற்பின் மனைவியொடு இருந்த
ஆசு இல் கொள்கை அறவிபால் அணைந்து, ஆங்கு,
ஆடு இயல் கொள்கை அந்தரி கோலம்
பாடும் பாணரில் பாங்குறச் சேர்ந்து,
செந்திறம் புரிந்த செங்கோட்டு-யாழில்,
தந்திரிகரத்தொடு திவவு உறுத்து யாஅத்து,
ஒற்று உறுப்பு உடைமையின் பற்றுவழிச் சேர்த்தி
உழை முதல் கைக்கிளை இறுவாய்க் கட்டி,
வரன்முறை வந்த மூ-வகைத் தானத்து,
பாய் கலைப் பாவை பாடல்-பாணி
ஆசான் திறத்தின் அமைவரக் கேட்டு,
பாடல்-பாணி அளைஇ, அவரொடு-

"மதுரைப் பதிக்கு இன்னும் எஞ்சியுள்ள வழி பற்றிப் பாணரிடம் கோவலன் வினாவுதலும், அவர் விடை பகர்தலும்"

கூடல் காவதம் கூறுமின் நீர்’ என-
‘காழ் அகில் சாந்தம், கமழ் பூங் குங்குமம்,
நாவிக் குழம்பு, நலம் கொள் தேய்வை,
மான்மதச் சாந்தம், மணம் கமழ் தெய்வத்
தே மென் கொழுஞ் சேறு ஆடி; ஆங்கு,
தாது சேர் கழுநீர், சண்பகக் கோதையொடு,
மாதவி, மல்லிகை, மனை வளர் முல்லைப்

போது விரி தொடையல் பூ அணை பொருந்தி;
அட்டில் புகையும், அகல் அங்காடி
முட்டாக் கூவியர் மோதகப் புகையும்,
மைந்தரும் மகளிரும் மாடத்து எடுத்த
அம் தீம் புகையும், ஆகுதிப் புகையும்,
பல் வேறு பூம் புகை அளைஇ; வெல் போர்
விளங்கு பூண் மார்பின் பாண்டியன் கோயிலின்
அளந்து உணர்வு-அறியா ஆர் உயிர் பிணிக்கும்
கலவைக் கூட்டம் காண்வரத் தோன்றி;
புலவர் செந் நாப் பொருந்திய நிவப்பின்
பொதியில் தென்றல் போலாது, ஈங்கு,
மதுரைத் தென்றல் வந்தது; காணீர்!
நனி சேய்த்து அன்று அவன் திரு மலி மூதூர்;
தனி, நீர் கழியினும் தகைக்குநர் இல்' என-

" முந்திய நாளில் போல, மூவரும் இரவில் வழிநடத்தல் "

முன் நாள் முறைமையின், இருந் தவ முதல்வியொடு
பின்னையும் அல்லிடைப் பெயர்ந்தனர் பெயர்ந்து, ஆங்கு

" வைகறைப்போதில் மதுரையின் பேரொலி கேட்டு வருத்தம் நீங்குதல் ,"

அரும் தெறல் கடவுள் அகன் பெரும் கோயிலும்,
பெரும் பெயர் மன்னவன் பேர் இசைக் கோயிலும்,
பால் கெழு சிறப்பின் பல் இயம் சிறந்த
காலை முரசக் கனை குரல் ஓதையும்;
நான்மறை அந்தணர் நவின்ற ஓதையும்;
மாதவர் ஓதி மலிந்த ஓதையும்;
மீளா வென்றி வேந்தன் சிறப்பொடு
வாளோர் எடுத்த நாள் அணி முழவமும்;
போரில் கொண்ட பொரு கரி முழக்கமும்
வாரிக் கொண்ட வயக் கரி முழக்கமும்;
பணை நிலைப் புரவி ஆலும் ஓதையும்;
கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியும்;
;கார்க் கடல் ஒலியின், கலி கெழு கூடல்

ஆர்ப்பு ஒலி எதிர்கொள, ஆர் அஞர் நீங்கி-

" வையை ஆற்றின் காட்சி "

குரவமும், வகுளமும், கோங்கமும், வேங்கையும்,
மரவமும், நாகமும், திலகமும், மருதமும்,
சேடலும், செருந்தியும், செண்பக ஓங்கலும்,
பாடலம்-தன்னொடு பல் மலர் விரிந்து;
குருகும், தளவமும், கொழுங்கொடி முசுண்டையும்,
விரி மலர் அதிரலும், வெண் கூதாளமும்,
குடசமும், வெதிரமும், கொழுங் கொடிப் பகன்றையும்,
பிடவமும், மயிலையும், பிணங்கு அரில் மணந்த
கொடுங் கரை மேகலைக் கோவை யாங்கணும்
மிடைந்து, சூழ்போகியஅகன்று ஏந்து அல்குல்:
வாலுகம் குவைஇய மலர்ப் பூந் துருத்தி,
பால்புடைக் கொண்டு, பல் மலர் ஓங்கி,
எதிர் எதிர் விளங்கிய கதிர் இள வன முலை:
கரைநின்று உதிர்த்த கவிர் இதழ்ச் செவ் வாய்:
அருவி முல்லை அணி நகைஆட்டி-
விலங்கு நிமிர்ந்து ஒழுகிய கருங் கயல் நெடுங் கண்:
விரை மலர் நீங்கா அவிர் அறல் கூந்தல்;
உலகு புரந்து ஊட்டும் உயர் பேர் ஒழுக்கத்துப்
புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி-
வையை என்ற பொய்யாக் குலக்கொடி-
தையற்கு உறுவது தான் அறிந்தனள் போல்,
புண்ணிய நறு மலர் ஆடை போர்த்து,
கண் நிறை நெடு நீர் கரந்தனள், அடக்கி-

"வையையைக் கடந்து, மூவரும் தென் கரை சேர்தல்"

புனல் யாறு அன்று; இது பூம் புனல் யாறு!' என,
அன நடை மாதரும் ஐயனும் தொழுது;
பரி முக அம்பியும், கரி முக அம்பியும்,
அரி முக அம்பியும், அரும் துறை இயக்கும்
பெரும் துறை மருங்கின் பெயராது; ஆங்கண்,
மாதவத்துஆட்டியொடு மரப் புணை போகி;

தே மலர் நறும் பொழில் தென் கரை எய்தி-

" மதுரை மா நகரின் புறஞ்சேரியை அடைதல் "

‘வானவர் உறையும் மதுரை வலம் கொளத்
தான் நனி பெரிதும் தகவு உடைத்து’ என்று, ஆங்கு,
அரு மிளை உடுத்த அகழி சூழ்போகி;
கரு நெடுங் குவளையும், ஆம்பலும், கமலமும்,
தையலும் கணவனும் தனித்து உறு துயரம்
ஐயம் இன்றி அறிந்தன போல,
பண் நீர் வண்டு பரிந்து இனைந்து ஏங்கி,
கண்ணீர் கொண்டு கால் உற நடுங்க;
போர் உழந்து எடுத்த ஆர் எயில் நெடுங் கொடி,
‘வாரல்’ என்பன போல், மறித்துக் கை காட்ட;
புள் அணி கழனியும் பொழிலும் பொருந்தி,
வெள்ள நீர்ப் பண்ணையும், விரி நீர் ஏரியும்,
காய்க் குலைத் தெங்கும், வாழையும், கமுகும்,
வேய்த் திரள் பந்தரும், விளங்கிய இருக்கை;
அறம் புரி மாந்தர் அன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர்; புக்கனர் புரிந்து-என்

பெரிய புராணம் – திருநின்ற சருக்கம்

பெரிய புராணத்தின் ஆசிரியர் சேக்கிழார். இந்நூல் சிவபெருமானின் பக்தர்களாகிய 63 அடியவர்களின் வரலாற்றினைக் கூறுகின்றது. இதற்கு சேக்கிழார் வைத்த
பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதாகும். அளவில் பெரியதாக உள்ளமையால் இந்நூலை ப் பெரிய புராணம் என்று சிறப்பித்துக் கூறுகின்றனர். இதில் கூறப்பட்டுள்ள அடியார்கள் பல்வேறு நாடும் ஊரும் சாதியும் தொழிலும் கொண்டவர்கள்.இவர்களுடைய வாழ்க்கையை விவரிக்கும் பெரிய புராணம் அன்றைய மக்களின் வாழ்க்கை, பழக்க வழக்கங்கள், கல்வி முறை, அரசு, இசை, நடனம் போன்ற செய்திகளையும் விவரித்துக் கூறுகிறது. இந்நூல் தொடர்பில்லை சர் செய்யுமாம் அமைந்து ஒரு பழைய சரித்திரத்தை க் கூறும் சிறந்த நூலாக விளங்குவதால் இதனை ஒரு பெருங்காப்பியம் என்பர்.

இந்நூலின் ஆசிரியரான சேக்கிழாரின் இயற்பெயர் அருண்மொழி தன் தேவர்.இவர் இரண்டாம் குலோத்துங்க ச் சோழனுக்கு அமைச்சராக விளங்கினார். இவருடைய பாடல்களில் இயற்கை வருணனன , இறைமணம் கமழ்வதைக் காணலாம்.இவரது காலம் பன்னிரண்டாம் நுற்றாண்டின் முற்பகுதி ஆகும்.

அப்பூதி அடிகள் நாயனார் புராணம்

1. தாண்டவம் புரிய வல்ல தம்பிரானாருக்கு அன்பர்
ஈண்டிய புகழின் பாலார் எல்லை இல் தவத்தின் மிக்கார்
ஆண்ட சீர் அரசின் பாதம் அடைந்து அவர் அறியா முன்னே
காண் தகு காதல் கூரக் கலந்த அன்பினர் ஆய் உள்ளார்.

2. களவு பொய் காமம் கோபம் முதலிய குற்றம் காய்ந்தார்
வளம் மிகு மனையின் வாழ்க்கை நிலையினார் மனைப் பால் உள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள் ஆ வொடு மேதி மற்றும்
உள எலாம் அரசின் நாமம் சாற்றும் அவ் ஒழுக்கல் ஆற்றார்.

3. வடிவு தாம் காணார் ஆயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்

அடிமையும் தம்பிரானார் அருளும் கேட்டு அவர் நாமத்தால்
படி நிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலாய் உள்ள
முடிவு இலா அறங்கள் செய்து முறைமையால் வாழும் நாளில்.

4. பொருப்பரையன் மடப் பிடியின் உடன் புணரும் சிவக்களிற்றின்
திருப் பழனம் பணிந்து பணி செய் திருநாவுக்கு அரசர்
ஒருப் படு காதலின் பிறவும் உடையவர் தம்பதி வணங்கும்
விருப்பினொடும் திங்களூர் மருங்கு வழி மேவுவார்.

5. அளவு இல் சனம் செலவு ஒழியா வழிக்கரையில் அருள் உடையார்
உளம் அனைய தண் அளித்தாய் உறுவேனில் பரிவு அகற்றிக்
குளம் நிறைந்த நீர்த் தடம் போல் குளிர் தூங்கும் பரப்பினது ஆய்
வளம் மருவும் நிழல் தரு தண்ணீர்ப் பந்தர் வந்து அணைந்தார்.

6. வந்து அணைந்த வாகீசர் மந்த மாருத சீதப்
பந்தர் உடன் அமுதம் ஆம் தண்ணீரும் பார்த்து அருளிச்
சிந்தை வியப்பு உற வருவார் திருநாவுக்கரசு எனும் பேர்
சந்தம் உற வரைந்து அதனை எம் மருங்கும் தாம் கண்டார்.

7. இப் பந்தர் இப் பெயர் இட்டு இங்கு அமைத்தார் யார் என்றார்க்கு
அப் பந்தர் அறிந்தார்கள் ஆண்ட அரசு எனும் பெயரால்
செப்பு அரும் சீர் அப்பூதி அடிகளார் செய்து அமைத்தார்
தப்பு இன்றி எங்கும் உள சாலை குளம் கா என்றார்.

8. என்று உரைக்க அரசு கேட்டு இதற்கு என்னோ கருத்து என்று
நின்ற வரை நோக்கி அவர் எவ்விடத்தார் என வினவத்
துன்றிய நூல் மார்பரும் இத் தொல் பதியார் மனையின் கண்
சென்றனர் இப்பொழுது அதுவும் சேய்த்து அன்று நணித்து என்றார்.

9. அங்கு அகன்று முனிவரும் போய் அப்பூதி அடிகளார் தங்கு மனைக் கடைத் தலை முன் சார்வாக உள் இருந்த திங்களூர் மறைத் தலைவர் செழுங்கடையில் வந்து அடைந்தார் நங்கள் பிரான் தமர் ஒருவர் எனக் கேட்டு நண்ணினார்.

10. கடிது அணைந்து வாகீசர் கழல் பணிய மற்று அவர் தம் அடி பணியா முன் பணியும் அரசின் எதிர் அந்தணரார் முடிவு இல் தவம் செய்தேன் கொல் முன்பொழியும் கருணை புரி வடிவு உடையீர் என் மனையில் வந்து அருளிற்று என் என்றார்.

11. ஒரு குன்ற வில்லாரைத் திருப் பழனத்து உள் இறைஞ்சி வருகின்றோம் வழிக் கரையில் நீர் வைத்த வாய்ந்த வளம் தருகின்ற நிழல் தண்ணீர்ப் பந்தரும் கண்டு அத் தகைமை புரிகின்ற அறம் பிறவும் கேட்டு அணைந்தோம் எனப் புகல்வார்.

12. ஆறு அணியும் சடை முடியார் அடியார்க்கு நீர் வைத்த ஈறு இல்பெருந் தண்ணீர்ப் பந்தரில் நும் பேர் எழுதாதே வேறு ஒரு பேர் முன் எழுத வேண்டிய காரணம் என் கொல் கூறும் என எதிர் மொழிந்தார் கோதுஇல் மொழிக் கொற்றவனார்.

13. நின்ற மறையோர் கேளா நிலை அழிந்த சிந்தையராய் நன்று அருளிச் செய்து இலீர் நாண் இல் அமண் பதகர் உடன் ஒன்றிய மன்னவன் சூட்சி திருத் தொண்டின் உறைப் பாலே வென்றவர் தம் திருப்பேரோ வேறு ஒரு பேர் என வெகுள்வார்.

14. நம்மை உடையவர் கழல் கீழ் நயந்த திருத் தொண்டாலே இம்மையிலும் பிழைப்பது என என் போல் வாரும் தெளியச் செம்மை புரி திருநாவுக்கரசர் திருப் பெயர் எழுத வெம்மை மொழி யான் கேட்க விளம்பினீர் என விளம்பி.

15. பொங்கு கடல் கல் மிதப்பில் போந்து ஏறும் அவர் பெருமை அங்கணர் தம் புவனத்தில் அறியாதார் யார் உளரே மங்கலம் ஆம் திரு வேடத்துடன் இன்று இவ்வகை மொழிந்தீர் எங்கு உறைவீர் நீர் தாம் யார் இயம்பும் என இயம்பினார்.

16. திரு மறையோர் அது மொழியத் திரு நாவுக்கரசர் அவர் பெருமை அறிந்து உரை செய்வார் பிற துறையில் நின்று ஏற அருளு பெருஞ்சூலையினால் ஆட் கொள்ள அடைந்து உய்ந்த தெருளும் உணர்வு இல்லாத சிறுமை யேன் யான் என்றார்.

17. அரசு அறிய உரை செய்ய அப்பூதி அடிகள் தாங் கர கமலம் மிசை குவியக் கண் அருவி பொழிந்து இழிய உரை குழறி உடம்பு எல்லாம் உரோம புளகம் பொலியத் தரையின் மிசை வீழ்ந்து அவர் தம் சரண கமலம் பூண்டார்.

18. மற்று அவரை எதிர் வணங்கி வாகீசர் எடுத்து அருள அற்றவர்கள் அரு நிதியம் பெற்றார் போல் அரு மறையோர் முற்றம் உளம் களி கூர முன் நின்று கூத்தாடி உற்ற விருப்பு உடன் சூழ ஓடினார் பாடினார்.

19. மூண்ட பெரு மகிழ்ச்சியினால் முன் செய்வது அறியாதே ஈண்ட மனை அகத்து எய்தி இல்லவர்க்கும் மக்களுக்கும் ஆண்ட அரசு எழுந்து அருளும் ஓகை உரைத்த ஆர்வம் உறப் பூண்ட பெருஞ் சுற்றம் எலாம் கொடு மீளப் புறப்பட்டார்.

20. மனைவியார் உடன் மக்கள் மற்றும் உள்ள சுற்றத்தோர் அனைவரையும் கொண்டு இறைஞ்சி ஆராத காதல் உடன் முனைவரை உள் எழுந்து அருளுவித்து அவர் தாள் முன் விளக்கும் புனை மலர் நீர் தங்கள் மேல் தெளித்து உள்ளம் பூரித்தார்.

21. ஆசனத்தில் பூசனைகள் அமர் வித்து விருப்பின் உடன்
வாசம் நிறை திரு நீற்றுக் காப்பு ஏந்தி மனம் தழைப்பத்
தேசம் உய்ய வந்த வரைத் திரு அமுது செய்விக்கும்
நேசம் உற விண்ணப்பம் செய அவரும் அது நேர்ந்தார்.

22. செய்தவர் இசைந்த போது திரு மனையாரை நோக்கி
எய்திய பேறு நம்பால் இருந்தவாறு என்னே என்று
மை திகழ் மிடற்றினான் தன் அருளானால் வந்தது என்றே
உய்தும் என்று உவந்து கொண்டு திரு அமுது ஆக்கல் உற்றார்.

23. தூய நல் கறிகள் ஆன அறுவகைச் சுவையால் ஆக்கி
ஆய இன் அமுதும் ஆக்கி அமுது செய்து அருளத் தங்கள்
சேயவர் தம்மில் மூத்த திருநாவுக்கு அரசை வாழை
மேய பொன் குருத்துக் கொண்டுவா என விரைந்து விட்டார்.

24. நல்ல தாய் தந்தை ஏவ நான் இது செயப் பெற்றேன் என்று
ஒல்லையில் விரைந்து தோட்டத்துள் புக்குப் பெரிய வாழை
மல்லல் அங்குருத்தை ஈரும் பொழுதினில் வாள் அரா ஒன்று
அல்லல் உற்று அழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற்று அன்றே.

25. கையினில் கவர்ந்து சுற்றிக் கண் எரி காந்துகின்ற
பை அரா உதறி வீழ்த்துப் பதைப்பு உடன் பாந்தாள் பற்றும்
வெய்ய வேகத்தால் வீழா முன்னம் வேகத்தால் எய்திக்
கொய்த இக் குருத்தைச் சென்று கொடுப்பன் என்று ஓடி வந்தான்.

26. பொருந்திய விட வேகத்தில் போதுவான் வேகம் உந்த
வருந்தியே அணையும் போழ்து மாசுணம் கவர்ந்தது யார்க்கும்
அருந்தவர் அமுது செய்யத் தாழ்க்க யான் அறையேன் என்று

திருந்திய கருத்தினோடும் செழுமனை சென்று புக்கான்.

27. எரிவிடம் முறையே ஏறித் தலைக் கொண்ட ஏழாம் வேகம்
தெரிவு உற எயிறும் கண்ணும் மேனியும் கருகித் தீந்து
விரி உரை குழறி ஆவி விடக் கொண்டு மயங்கி வீழ்வான்
பரி கலக் குருத்தைத் தாயார் பால் வைத்துப் படி மேல் வீழ்ந்தான்.

28. தளர்ந்து வீழ் மகனைக் கண்டு தாயரும் தந்தை யாரும்
உளம் பதைத்து உற்று நோக்கி உதிரம் சோர் வடிவும் மேனி
விளங்கிய குறியும் கண்டு விடத்தினால் வீந்தான் என்று
துளங்குதல் இன்றித் தொண்டர் அமுது செய்வதற்குச் சூழ்வார்.

29. பெறல் அரும் புதல்வன் தன்னைப் பாயினுட் பெய்து மூடிப்
புற மனை முன்றில் பாங்கு ஓர் புடையினில் மறைத்து வைத்தே
அற இது தெரியா வண்ணம் அமுது செய்விப்போம் என்று
விறல் உடைத் தொண்டனார் பால் விருப்பொடு விரைந்து வந்தார்.

30. கடிது வந்து அமுது செய்யக் காலம் தாழ்க்கின்றது என்றே
அடிசிலும் கறியும் எல்லாம் அழகு உற அணைய வைத்துப்
படியில் சீர்த்தொண்டனார் முன்பணிந்து எழுந்து அமுது செய்துஎம் குடி
முழுதும் உய்யக் கொள்வீர் என்று அவர் கூறக் கேட்டு.

31. அருந்தவர் எழுந்து செய்ய அடி இணை விளக்கி வேறு ஓர்
திருந்தும் ஆசனத்தில் ஏறிப் பரிகலம் திருத்தும் முன்னர்
இருந்து வெண் நீறு சாத்தி இயல்பு உடை இருவருக்கும்
பொருந்திய நீறு நல்கிப் புதல்வர்க்கும் அளிக்கும் போழ்தில்.

32. ஆதி நான்மறை வாய்மை அப்பூதியாரை நோக்கிக்
காதலர் இவர்க்கு மூத்த சேயையும் காட்டும் முன்னே

மேதகு பூதி சாத்த என்றலும் விளைந்த தன்மை யாதும் ஒன்று உரை செய்யார் இப்போது இங்கு அவன் உதவான் என்றார்.

33. அவ் உரை கேட்ட போதே அங்கணர் அருளால் அன்பர்
செவ்விய திரு உள்ளத்து ஓர் தடு மாற்றம் சேர நோக்கி
இவ்உரை பொறாது என்உள்ளம் என்செய்தான் இதற்குஒன்று உண்டால்
மெய் விரித்து உரையும் என்னவிளம்புவார் விதிர்ப்புஉற்று அஞ்சி.

34. பெரியவர் அமுது செய்யும் பேறு இது பிழைக்க என்னோ
வருவது என்று உரையார் ஏனும் மாதவர் வினவ வாய்மை
தெரி உற உரைக்க வேண்டும் சீலத்தால் சிந்தை நொந்து
பரிவொடு வணங்கி மைந்தர்க்கு உற்றது பகர்ந்தார் அன்றே.

35. நாவினுக்கு அரசர் கேளா நன்று நீர் புரிந்த வண்ணம்
யாவர் இத் தன்மை செய்வார் என்று முன் எழுந்து சென்றே
ஆவி தீர் சவத்தை நோக்கி அண்ணலார் அருளும் வண்ணம்
பா இசைப் பதிகம் பாடிப் பணி விடம் பாற்று வித்தார்.

36. தீ விடம் நீங்க உய்ந்த திரு மறையவர் தம் சேயும்
மேவிய உறக்கம் நீங்கி விரைந்து எழுவானைப் போன்று
சே உகைத்தவர் ஆள் கொண்ட திருநாவுக்கரசர் செய்ய
பூ அடி வணங்கக் கண்டு புனித நீறு அளித்தார் அன்றே.

37. பிரிவு உறும் ஆவி பெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார் நின்ற அப் பயந்தார் தாங்கள்
அறிவு அரும் பெருமை அன்பர் அமுது செய்து அருளுதற்குச்
சிறிது இடையூறு செய்தான் இவன் என்று சிந்தை நொந்தார்.

38. ஆங்கு அவர் வாட்டம் தன்னை அறிந்து சொல் அரசர் கூட
ஓங்கிய மனையில் எய்தி அமுது செய்து அருள உற்ற
பாங்கினில் இருப்ப முந்நூல் பயில் மணி மார்பர் தாமும்
தாங்கிய மகிழ்ச்சி யோடும் தகுவன சமைத்துச் சார்வார்.

39. புகழ்ந்த கோமயத்து நீரால் பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்த வான் சுதையும் போக்கிச் சிறப்பு உடைத் தீபம் ஏற்றி
நிகழ்ந்த அக் கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்து உடன் விளக்கி ஈர்வாய் வலம் பெற மரபின் வைத்தார்.

40. திருந்திய வாச நல் நீர் அளித்திடத் திருக்கை நீவும்
பெருந்தவர் மறையோர் தம்மைப் பிள்ளைகள் உடனே நோக்கி
அரும் புதல்வர்களும் நீரும் அமுது செய்வீர் இங்கு என்ன
விரும்பிய உள்ளத்தோடு மேலவர் ஏவல் செய்வார்.

41. மைந்தரும் மறையோர் தாமும் மருங்கு இருந்து அமுது செய்யச்
சிந்தை மிக்கி இல்ல மாதர் திரு அமுது எடுத்து நல்கக்
கொந்து அவிழ் கொன்றை வேணிக் கூத்தனார் அடியாரோடும்
அந் தமிழ் ஆளியார் அங்கு அமுது செய்து அருளினாரே.

42. மா தவ மறையோர் செல்வ மனை இடை அமுது செய்து
காதல் நண்பு அளித்துப் பல் நாள் கலந்து உடன் இருந்த பின்றை
மே தகு நாவின் மன்னர் விளங்கிய பழன மூதூர்
நாதர் தம் பாதம் சேர்ந்து நல் தமிழ்ப் பதிகம் செய்வார்.

43. அப்பூதி அடிகளார் தம் அடிமையைச் சிறப்பித்து ஆன்ற
மெய்ப் பூதி அணிந்தார் தம்மை விரும்பு சொல் மாலை வேய்ந்த
இப் பூதி பெற்ற நல்லோர் எல்லை இல் அன்பால் என்றும்
செப்பு ஊதியம் கைக் கொண்டார் திருநாவுக்கரசர் பாதம்.

44. இவ் வகை அரசின் நாமம் ஏத்தி எப் பொருளும் நாளும்
அவ்அருந்தவர் பொன்தாளை என உணர்ந்து அடைவார் செல்லும்
செவ்விய நெறியது ஆகத் திருத் தில்லை மன்று உள் ஆடும்
நவ்வியம் கண்ணாள் பங்கர் நல் கழல் நண்ணினாரே

45. மான் மறிக் கையர் பொன் தாள் வாகீசர் அடைவால் பெற்ற
மேன்மை அப்பூதியாராம் வேதியர் பாதம் போற்றிக்
கான் மலர்க் கமல வாவிக் கழனி சூழ் சாத்த மங்கை
நான் மறை நீல நக்கர் திருத் தொழில் நவிலல் உற்றேன்.

திருவாசகம்

சைவ சமயத்தில் தோன்றிய நாயன்மார்களில் ஒருவரான மாணிக்கவாசகரால் இயற்றப்பட்ட நூலே திருவாசகம் ஆகும். திருவாசகம் என்ற சொல்லுக்கு மேன்மையான வாசகம் என்ற பொருளுண்டு.' திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பதும் ' திருவாசகம் என்னும் தேன்' என்பதும் இந்நூலின் பெருமையை உணர்த்தும் தொடர்கள் ஆகும்.இதனை இயற்றிய மாணிக்கவாசகர் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் திருவாதவூரில் பிறந்தார். ஆரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்த போது ' தென்னவன் பிரம்மராயன்' என்ற பட்டம் பெற்றார். இவர் சிவபெருமான் மீது அளவற்ற பக்தி கொண்டவர். எனவே இவருக்காக இறைவனே காட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கி (குதிரைகளாக்கி) ஓட்டி வந்தார் என்பர்.இவர் இயற்றிய மற்றொரு நூல் திருக்கோவையார் ஆகும்.

திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே! வளருதியோ? வன்செவியோ நின் செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே!எனஎன்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

திருபொற்சுண்ணம்

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்திருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியும் தானும்வந்து எம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

திருக்கோத்தும்பி

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்ஒப்பில் என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி.

திருச்சாழல்

கோலாலம் ஆகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடி
ஆலாலம் உண்டிலனேல் அன்றுஅயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ

திருப்பள்ளியெழுச்சி

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணைக் காட்டாமல்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரியாய் எமக்கு எளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்த ருளாயே.

சொல் இலக்கணம்

ஒரு எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ ஒரு பொருளைத் தருவது சொல் எனப்படும்.

(எ-டு) கை, பூ, தீ, தா – ஓரெழுத்துச் சொற்கள்

மண், வானம் – பல எழுத்துச் சொற்கள்

பதம்

சொல்லைப் பதம் என்றும் கூறுவர்.பதம் என்பது

- பகுபதம்
- பகாப்பதம்

என இருவகைப்படும்

பகுபதம்

பிரிக்க இயன்ற சொற்கள், அதாவது பிரித்தாலும் பொருள் தருகின்ற சொற்கள் பகுபதம் எனப்படும்.

(எ-டு) படித்தேன் = படி + த்+ த்+ஏன்

பகாப்பதம்

பிரிக்க இயலாத அதாவது பிரித்தால் பொருள் தராத சொற்கள் பகாப்பதம் எனப்படும்.

(எ-டு) மரம், கண், சட்டம்

பகுபத உறுப்புகள்

பகுபதத்தை ஆறு உறுப்புகளாகப் பிரிப்பர்.

அவை:

1 பகுதி

2 விகுதி

3 இடைநிலை

4 சாரியை

5 சந்தி

6 விகாரம்

இவற்றைப் பகுபத உறுப்புகள் என்பர்.

பகுதி

பகுபதத்தின் முதற்பகுதி பகுதியாகும்.அது முழுப் பொருளையும் கொடுக்கும்.

விகுதி

பகுபதத்தின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றை உணர்த்தும்.

இடைநிலை

பகுபதத்தின் , பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று , காலத்தைக் காட்டும்.

சாரியை

பகுபதத்தின் விகுதிக்கு முன்னும் இடைநிலைக்குப் பின்னுமாக நிற்கும். இது விகுதியைச் சார்ந்து வருவதால் சாரியை எனப்படும்.

சந்தி

பகுபதத்தின் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும் உறுப்பு சந்தி எனப்படும்.

விகாரம்

பகுபதத்தின் சந்தியாக வரும் எழுத்து திரிந்து இன்னொரு எழுத்தாக மாறுவது விகாரம் எனப்படும்.

பகுபத உறுப்புகளுக்கு எடுத்துக் காட்டு

நடந்தனர்

நட+ந் (த்)+த்+அன்+அர்

நட – பகுதி

ந் - 'த்' 'ந்' தாக மாறியுள்ளது.எனவே இது விகாரம்.

த் - சந்தி

த் - இறந்தகால இடைநிலை

அன் – சாரியை

அர் – பலர்பால் வினைமுற்று விகுதி

சொற்களின் வகைகள்

தமிழில் சொற்கள் இலக்கண வகையில் நான்கு வகைப்படும்.

அவை:

1 பெயர்ச் சொல்

2 வினைச்சொல்

3 இடைச் சொல்
4 உரிச்சொல்

பெயர்ச் சொல்

ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல். பெயர்ச் சொல் எனப்படும்.இ்து ஆறு வகைப்படும்.

அவை:

1 பொருட் பெயர் – பம்பரம், புத்தகம்
A2 இடப் பெயர் - வீடு, நகரம், தெரு
3 காலப் பெயர் - காலை, மாதம், ஆண்டு
4 சினைப் பெயர் - கை, கால், இலை, காய்
5 குணப் பெயர் - நன்மை, கருமை
(பண்புப் பெயர்)
6 தொழிற் பெயர் - படித்தல், நடித்தல்

வினைச்சொல்

ஒரு செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.இது

- முற்று
- எச்சம்

என இரு வகைப்படும்.

முற்று

செயல் முடிவு பெற்றதைக் குறிக்கும் சொல் வினைமுற்று எனப்படும்.

(எ-டு) வந்தான்

வினைமுற்றானது,

- தெரிநிலை வினைமுற்று
- குறிப்பு வினைமுற்று

என இரு வகைப்படும்.

தெரிநிலை வினைமுற்று

ஒரு வினைமுற்று செய்பவன், கருவி, நிலம், செயல், காலம் ,செய்பொருள் என்னும் ஆறையும் உணர்த்துவது தெரிநிலை வினைமுற்று ஆகும்.

(எ-டு) அமுதன் ஓவியம் வரைந்தான்

இதில் , செய்பவன் – அமுதன்

கருவி - தூரிகை அல்லது எழுதுகோல்

செயல் - வரைதல்

காலம் - இறந்த காலம்

செய்பொருள் – ஓவியம்

குறிப்பு வினைமுற்று

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், என்னும் ஆறின் அடிப்படையில் தோன்றி , செய்பவன் ,கருவி, நிலம்,செயல் ,காலம், செய்பொருள் என்னும் ஆறினுள் செய்பவனாகிய கருத்தாவை மட்டும் விளக்குவது குறிப்பு வினைமுற்று ஆகும்.இது காலத்தை வெளிப்படையாக உணர்த்தாது.

(எ-டு) பொன்னன் - பொருள்

பெங்களூரான் - இடம்

கார்த்திகா - காலம்

மூக்கன் - சினை

வெள்ளையன் - குணம்

தச்சன் - தொழில்

எச்சம்

பொருள் முடிவு பெறாத வினைச்சொல் எச்சம் எனப்படும்

இது ,

- பெயரெச்சம்,
- வினையெச்சம்

என்று இருவகைப்படும்.

பெயரெச்சம்

ஒரு எச்சவினைச்சொல் , பெயர்ச்சொல்லை ஏற்று முடிவு பெறுவது பெயரெச்சம் எனப்படும். இது இருவகைப்படும்.

அவை:

- தெரிநிலைப் பெயரெச்சம்
- குறிப்புப் பெயரெச்சம்

தெரிநிலைப் பெயரெச்சம்

ஒரு எச்சவினைச்சொல், காலத்தையும் செயலையும் உணர்த்தி நின்று , அறுவகைப் பெயர்களுள் ஒன்றினை ஏற்று முடிவது, தெரிநிலைப் பெயரெச்சம் ஆகும்.

(எ-டு)

வந்த பையன்

வருகின்ற பையன்

வரும் பையன்

இத்தொடர்களில் வந்த, வருகின்ற, வரும் என்னும் சொற்கள், பொருள் முடிவு பெறவில்லை.அவை முறையே முக்காலத்தையும், வருதல் என்ற செயலையும் உணர்த்தி நின்று , பையன் என்னும் பெயர்ச் சொல்லை ஏற்று முடிந்துள்ளன.

குறிப்புப் பெயரெச்சம்

ஒரு எச்சச்சொல், காலத்தையோ செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்ச் சொல்லை ஏற்று முடிவது, குறிப்புப் பெயரெச்சம் ஆகும்.

(எ-டு)

நல்ல மனிதன்

அழகிய வீடு

எதிர்மறைப் பெயரெச்சம்

பொருள் முடிவு பெறாத பெயரெச்சம், எதிர்மறைப் பொருளை உணர்த்தினால் அது எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும்.

(எ-டு) படிக்காத பையன்

பேசாத கிளி

இத்தொடர்களில் உள்ள படிக்காத, பேசாத என்ற பெயரெச்சங்கள் எதிர்மறைப் பொருளை உணர்த்தி நின்று பெயரைக் கொண்டு முடிந்து உள்ளமையால் இவை எதிர்மறைப் பெயரெச்சங்கள் ஆகும்.

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பொருள் முடிவு பெறாத பெயரெச்சம், எதிர்மறைப் பொருளை உணர்த்தி, அதன் இறுதி எழுத்து கெட்டு (இல்லாமல்) வந்தால் அது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனப்படும்.

(எ-டு) வாடாப் பயிர்

ஆடா மயில்

வினையெச்சம்

பொருள் முடிவு பெறாத ஒரு எச்சவினை வினைச்சொல்லைக் கொண்டு முடிவது வினையெச்சம் எனப்படும். வினையெச்சம் இருவகைப்படும்.

அவை:

- தெரிநிலை வினையெச்சம்
- குறிப்பு வினையெச்சம்

தெரிநிலை வினையெச்சம்

ஒரு எச்சவினை, காலத்தையும் செயலையும் உணர்த்தி நின்று, ஒரு வினைமுற்றினைக் கொண்டு முடிவது தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

(எ-டு)

படித்து முடித்தான்

குறிப்பு வினையெச்சம்

ஒரு எச்சவினை, காலத்தை வெளிப்படையாக உணர்த்தாமல், பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, ஒரு வினைமுற்றினைக் கொண்டு முடிவது குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

(எ-டு)

மெல்ல நடந்தான்

இடைச்சொல்

தானே தனித்து இயங்காமல் பெயரையும் வினையையும் சார்ந்து இயங்கும் சொல் இடைச்சொல் எனப்படும்.

அவை:

- ஐ முதலிய வேற்றுமை உருபுகள்
- கிறு,கின்று போன்ற காலம் காட்டும் இடைநிலைகள்
- தல், அல், மை ஆகிய தொழிற்பெயர் விகுதிகள்
- அத்து, அன்று, அம் போன்ற சாரியைகள்
- ஏ, ஓ, உம், தோறும், தான், என, என்று போன்ற தத்தம் பொருள் உணர்த்தி வருபவை
- மற்று போன்ற அசைச் சொற்கள்
- உவம உருபுகள்

- ஆன்,அன், ஆள், அள், அர்,உ போன்ற பால் உணர்த்தும் விகுதிகள்

(எ-டு)

அவளைக் கண்டேன் - ஐ
நடக்கின்றான் - கின்று
படித்தல் – அல்
நடந்ததன்று – அன்று
வந்தாயே – ஏ
செய்தாயோ – ஓ
வந்ததென்று – என்று
‘ மற்று அறிவாய் நல்வினை' – மற்று
தாமரை போன்ற முகம் – போன்ற
படித்தாள் – ஆள்

உரிச்சொல்

ஒரு பொருளைக் குறிக்கும் பல சொல்லாகவும், பல பொருளைக் குறிக்கும் ஒரு சொல்லாகவும் நின்று, கற்றவர்கள் மட்டும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் வழங்கும் சொல் உரிச்சொல் எனப்படும்.

(எ-டு)

1. ஒரு பொருள் குறித்த பல சொற்கள் – சால, உறு, தவ, நனி, கூர், கழி – இவை மிகுதி என்ற ஒரு பொருள் குறித்த பல சொற்கள்
2. பல பொருள் குறித்த ஒரு சொற்கள் – கடி – இச் சொல் , காவல், புதுமை, கரிப்பு போன்ற பல பொருள்களைக் கொடுக்கும்.

தமிழில் சொற்கள் இலக்கிய வகையிலும் நான்கு வகைப்படும். அவை:

1. இயற்சொல்
2. திரிசொல்
3. திசைச்சொல்
4. வடசொல்
5.

இயற்சொல்

அனைவருக்கும் பொருள் விளங்கும் தன்மையினைக் கொண்ட சொல் இயற்சொல் எனப்படும்.

(எ-டு) மரம், வானம், காற்று போன்றவை

திரிசொல்

கற்றவர்களுக்கு மட்டும் பொருள் விளங்கும் அரிய சொல் திரிசொல் எனப்படும்.இது இருவகைப்படும்.

அவை:

- ஒரு பொருள் குறித்த பல சொல்
- பல பொருள் குறித்த ஒரு சொல்

(எ-டு)

- கிள்ளை,தத்தை, சுகம் – இவை கிளி என்னும் ஒரு பொருள் குறித்த பல திரிசொல்
- வேழம் – இச் சொல் கரும்பு, மூங்கில், யானை முதலிய பல பொருள் குறித்த ஒரு திரிசொல்

திசைச்சொல்

எல்லாத் திசைகளிலும் வழங்கும் வேற்று மொழிகளில் இருந்து , தமிழில் வந்து வழங்கும் சொல் திசைச்சொல் எனப்படும்.

(எ-டு). சிக்கு – கன்னடம்
கொக்கு – துளு
ஜன்னல் – போர்த்துகீசியம்
ஆசாமி - அரபு
அந்தோ (ஐயோ) - சிங்களம்

வடசொல்

வடமொழியில் இருந்து தமிழில் வந்து வழங்கும் சொல் வடசொல் எனப்படும்.இது இருவகைப்படும்.

அவை:

- தற்சமம்
- தறபவம்

தற்சமம்

தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான எழுத்துகளால் ஆகி, தமிழில் வழங்கும் போது எவ்வித மாற்றமும் இன்றி வழங்கும் சொற்கள் தற்சமம் எனப்படும்.

(எ-டு)

காரணம், கமலம், குங்குமம்

தற்பவம்

வடமொழிக்கே உரிய சிறப்பு எழுத்துகளால் ஆகி, தமிழில் வழங்கும் போது தமிழ் ஒலி முறைக்கு ஏற்ப மாறி வழங்கும் சொற்கள் தற்பவம் எனப்படும்.

(எ-டு)

விசேஷம் – விசேடம்
புத்ர - புத்திரன்

தொகாநிலைத் தொடர்

இரண்டு முதலான சொற்கள் தொடர்ந்து வரும் பொழுது சொல்லின் பகுதிகள் தொகாமல் அதாவது மறையாமல் வருவது தொகாநிலைத் தொடர் எனப்படும்.

அவை:

எழுவாய் வேற்றுமைத் தொடர் – அமுதன் வந்தான்
விளி வேற்றுமைத் தொடர் - அமுதா வா
பெயரெச்சத் தொடர் - வந்த அமுதன்
வினையெச்சத் தொடர் - சென்று அடைந்தான்
வினைமுற்றுத் தொடர் - சென்றான் அமுதன்
இடைச்சொல் தொடர் - மற்று ஒருவன்
உரிச்சொல் தொடர் - நனி சிறந்தது
வாழ்க வாழ்க - அடுக்குத் தொடர்

தொகைநிலைத் தொடர்

இரண்டு முதலான சொற்கள் தொடர்ந்து வரும் பொழுது உவம உருபு, பண்பு உருபு, வேற்றுமை உருபு போன்றவை தொக்கு அதாவது மறைந்து வருவது தொகைநிலைத் தொடர் எனப்படும்.

அவை:

வேற்றுமைத்தொகை
வினைத்தொகை
பண்புத்தொகை
உவமைத்தொகை
உம்மைத்தொகை, அன்மொழித்தொகை

வேற்றுமைத்தொகை

இரண்டாம் வேற்றுமை முதல் ஆறாம் வேற்றுமை வரை உள்ள உருபுகள் சொற்களுக்கு இடையில் மறைந்து வருவது வேற்றுமைத்தொகை எனப்படும்.

(எ-டு)

வீடு கட்டினான் - ஐ மறைந்து வந்துள்ளது.
இரண்டாம் வேற்றுமைத் தொகை

தலை வணங்குகிறேன் – ஆல் மறைந்து வந்துள்ளது
மூன்றாம் வேற்றுமைத் தொகை

எலிப் பகை - கு மறைந்து வந்துள்ளது
நான்காம் வேற்றுமைத் தொகை

ஊர் நீங்கினான் - இன் மறைந்து வந்துள்ளது
ஐந்தாம் வேற்றுமைத் தொகை

அவன் புத்தகம் - அது மறைந்து வந்துள்ளது
ஆறாம் வேற்றுமைத் தொகை

மலைக் கோயில் - கண் மறைந்து வந்துள்ளது
ஏழாம் வேற்றுமைத் தொகை

வினைத்தொகை

இரு சொற்களுக்கு இடையில் மூன்று காலமும் மறைந்து வருவது வினைத்தொகை எனப்படும்.

(எ-டு)

விளைநிலம்

இதில் விளைந்த நிலம், விளைகின்ற நிலம், விளையும் நிலம் என மூன்று காலமும் மறைந்து வந்துள்ளது.

பண்புத் தொகை

இரு சொற்களுக்கு இடையில் பண்பை விளக்குகின்ற ஆகிய, ஆன போன்ற உருபுகள் மறைந்து வருவது பண்புத் தொகை எனப்படும்.

(எ-டு) பைந்தமிழ், கருங்கடல்

உவமைத் தொகை

இரண்டு சொற்களுக்கு இடையில் உவம உருபு மறைந்து வருவது உவமைத் தொகை எனப்படும்.

(எ-டு)

கயல் விழி
பவளவாய்

உம்மைத்தொகை

இரு சொற்கள் சேர்ந்து வரும் பொழுது இடையில் உம் என்பது மறைந்து வருவது உம்மைத் தொகை எனப்படும்.

(எ-டு)

அண்ணன் தம்பி
வெற்றிலை பாக்கு

அன்மொழித் தொகை

மேலே குறிப்பிட்ட ஐந்து தொகைகளில் ஒன்று விரிந்த பின்னரும் பொருள் முடிவு பெறாமல் அவை அல்லாத வேறு மொழி மறைந்து வந்து பொருள் தருவது அன்மொழித் தொகை எனப்படும்.

(எ-டு)

கார்குழல் வந்தாள்

இத்தொடரில் கரிய கூந்தலை உடையவள் வந்தாள் என விரியும்.

மாணவர்களின் கவனத்திற்கு

பாடத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அலகு ஐந்து பகுதியில் இருந்தும் வினாக்கள் கேட்கப்படும் எனவே அல கு - 5க்கு உரிய கட்டுரைத் தொகுப்பான **வேர்ப்பலா** என்னும் நூலையும் நல்ல முறையில் படித்து தேர்வு எழுத வேண்டும்.